**செய்தி வெளியீடு எண் : 510** **நாள்: 01.04.2022**

## <u>செய்தி வெளியீடு</u>

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (1.4.2022) புதுடில்லியில், மாண்புமிகு ஒன்றிய நிதித்துறை அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்களை சந்தித்து, தமிழகத்தின் நிதி தொடர்பான பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுவை வழங்கினார். அதன் விவரங்கள் வருமாறு:**

<u>14வது நிதிக்குழு உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பரிந்துரைத்த அடிப்படை மானியம் மற்றும் செயல்பாட்டிற்கான எஞ்சிய மானியத்தினை விடுவிக்கக் கோருதல்</u>

2015–2020 காலகட்டத்திற்கு, 14வது நிதிக்குழு, தமிழ்நாட்டில் உள்ள ஊராட்சிகளுக்கு அடிப்படை மானியமாக 7,899.69 கோடி ரூபாய் பரிந்துரைத்தது. ஆனால், மொத்தமுள்ள 12,525 கிராமப் பஞ்சாயத்துகளில், 2900 கிராமப் பஞ்சாயத்துகளில் உள்ளாட்சித் தேர்தல்கள் நடைபெறாததால், 548.76 கோடி ரூபாய் அடிப்படை மானியத்தை ஒன்றிய அரசு விடுவிக்கவில்லை. நீதிமன்றத்தில் வழக்குகள் இருந்ததால், இந்த 2900 கிராமப் பஞ்சாயத்துகளில் தேர்தல்கள் அப்போது நடத்த இயலவில்லை.

இந்த அரசு பொறுப்பேற்றப் பின்னர், 2900 கிராமப் பஞ்சாயத்துகளில் கடந்த அக்டோபர் 6 மற்றும் 9 ஆம் தேதிகளில் உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்தப்பட்டு, உள்ளாட்சிப் பிரதிநிதிகள் தங்கள் பொறுப்பினை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இதைப்போன்று 14வது நிதிக்குழு 2016–17 முதல் 2019–20 வரையிலான காலத்தில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான செயல்பாட்டு மானியமாக தமிழ்நாட்டுக்கு 2,524.20 கோடி ரூபாய் பரிந்துரை செய்துள்ளது. அந்த மானியத்தொகையில் பரிந்துரைக் காலத்தில் ஒன்றிய அரசு 2016–17 ஆம் ஆண்டுக்கான செயல்பட்டு மானியமாக 494.09 கோடி ரூபாயை விடுவித்துள்ளது. இந்நிலையில் அதற்கான பயன்பாட்டுச் சான்றிதழ் ஒன்றிய அரசுக்கு அனுப்பப்பட்டு, 2017–18ம் ஆண்டுக்கான செயல்பாட்டு மானியத்தினை விடுவிக்க கோரிக்கை விடப்பட்டது. மானியங்களைப் பெறுவதற்கான அனைத்து நிபந்தனைகளை நிறைவேற்றியபோதும், பயன்பாட்டுச் சான்றிதழை அனுப்பிய நிலையிலும், 2017–18ம் ஆண்டுக்கான செயல்பாட்டு மானியம் தமிழ்நாட்டிற்கு விடுவிக்கப்படவில்லை. இதனைத் தொடர்ந்து 2018–19 மற்றும் 2019–20 ஆம் ஆண்டுக்கான மானியமும் விடுவிக்கப்படவில்லை.

இருப்பினும், 2017–18 ஆம் ஆண்டிற்கான செயல்பாட்டு மானியத்தினை பெரும்பாலான மற்ற மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு விடுவித்துள்ளது.

எனவே, அடிப்படை மானிய நிலுவைத்தொகையான 548.76 கோடி ரூபாயையும், செயல்பாட்டு மானியம் 2,029.22 கோடி ரூபாயையும் தமிழகத்திற்கு விரைந்து விடுவிக்க வலியுறுத்தப்படுகிறது.

ஒன்றிய அரசிடமிருந்து பெறவேண்டிய நிலுவைத் தொகைகள்

பெருந்தொற்றினால், மாநிலத்தின் வருவாய் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், தற்போது பெருந்தொற்றின் தாக்கம் குறைந்து வந்தாலும், மாநிலம் இன்னும் கடும் நிதிச்சுமையில் உள்ளது. பெருந்தொற்றினால், சுகாதாரக் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும், மருத்துவக் கருவிகள் மற்றும் மருந்துகளை கொள்முதல் செய்யவும், ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்டங்களைச் செயல்படுத்தவும், மாநில அரசிற்கு கூடுதல் செலவினங்கள் ஏற்பட்டுள்ளது.

சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீட்டு நிலுவைத் தொகையான 13,504.74 கோடி ரூபாய் உட்பட 20,860.40 கோடி ரூபாய் ஒன்றிய அரசிடம் நிலுவையில் உள்ளது. மாநிலம் தனது நிதி நெருக்கடியிலிருந்து மீண்டு வர, இந்த நிலுவைத் தொகையை உடனடியாக விடுவிக்க வேண்டும் என ஒன்றிய அரசிற்கு வலியுறுத்தப்படுகிறது.

சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீட்டிற்கான காலக்கெடுவினை நீட்டிக்கக் கோருதல்

சரக்கு மற்றும் சேவை வரியை அறிமுகப்படுத்திய பொழுது, மாநிலத்தின் வருவாய் பாதுகாக்கப்படும் என்று ஒன்றிய அரசு அளித்த வாக்குறுதியின் அடிப்படையில், மாநிலம் தனது நிதி சார்ந்த அதிகாரத்தைக் கைவிட்டது. கடந்த 5 ஆண்டுகளில், உறுதியளிக்கப்பட்ட பாதுகாக்கப்பட்ட வருவாய்க்கும், வசூலிக்கப்பட்ட வருவாய்க்கும் இடையே பெரும் இடைவெளி இருந்துள்ளது.

பெருந்தொற்றிற்கு முன்னரே, இத்தகைய போக்கு காணப்பட்டது. அதன்பின், இந்த இடைவெளி அதிகரித்துக் கொண்டே வந்துள்ளது. கோவிட் பெருந்தொற்றின் தாக்கம் குறைந்து வந்தாலும், மாநிலத்தின் வருவாய் இன்னும் அதிகரிக்கவில்லை. இந்நிலையில், 30.06.2022 அன்று, சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீட்டுத் தொகை வழங்கும் காலம் முடிவுக்கு வருகிறது. இதன் விளைவாக, 2022–23 நிதியாண்டில், தமிழ்நாடு ஏறத்தாழ 20,000 கோடி ரூபாய் வருவாய் இழப்பைச் சந்திக்க நேரிடும்.

இழப்பீடு வழங்கும் காலத்தை, ஜூன் 2022 க்குப் பின் குறைந்த பட்சம் 2 ஆண்டுகளுக்கு நீட்டிக்க வேண்டும் என்று ஒன்றிய அரசிற்கு வலியுறுத்தப்படுகிறது.

……….

**I. Release of balance basic grant and performance grant under Local Body Grant recommended by the 14th Finance Commission**

The 14th Finance Commission had recommended a sum of Rs.7899.69 Crore as Basic Grant for Rural Local Bodies during its award period 2015-2020. However, the Union Government has not released the basic grant of Rs.548.76 Crore to Tamil Nadu due to non conduct of local body elections in 2900 Village Panchayats. The elections in these 2900 Village Panchayats have not been conducted due to litigations in the court which are beyond the control of the State Government.

Subsequently, the elections in these 2900 Village Panchayats have been held on 6th and 9th October 2021 and elected members have assumed their posts.

Similarly, the 14th Finance Commission has also recommended a grant of Rs.2524.20 Crore as Performance Grant to Tamil Nadu during the period 2016-17 to 2019-20. On the above, the Union Government had released a sum of Rs.494.99 Crore for the year 2016-17 for which the utilisation certificates have been furnished with a request to release the grant for the year 2017-18. Despite compliance of the conditions and furnishing of utilisation certificates, the grant for the year 2017-18 has not been released to Tamil Nadu. Subsequently, the grant for the years 2018-19 and 2019-20 have also not been released.

However, the Union Government has released the performance grant to most of the States for the year 2017-18.

**Hence, we urge that the balance basic grant of Rs.548.76 Crore and performance grant of Rs. 2029.22 Crore be released to Tamil Nadu early.**

## II. Pending dues from the Union Government

The State Government is facing severe financial stress despite easing out of Covid pandemic at present, as the revenues have been badly affected due to pandemic. The pandemic necessitated the State to incur additional expenditure towards upgrading health infrastructure, medical

equipment, drugs and also implement welfare schemes for the vulnerable sections of the populace.

The pending dues from Government of India amount to Rs.20860.40 crore.

| **PENDING DUES FROM THE UNION GOVERNMENT** | | | | |
|---|---|---|---|---|
| | | | | **(Rs. in crore)** |
| **Sl. No.** | **SCHEME** | **Pending dues from GoI** | **Administrative Department** | **Union Ministry** |
| 1 | Sarva Shiksha Abiyan (SSA) | 2109.08 | School Education | M/o Human Resource Development |
| 2 | Rashtriya Madhyamik Shiksha Abhiyan (including spill over approved for 2015-16 & 2016-17) | 1092.22 | School Education | M/o Human Resource Development |
| 3 | Grants for Flood Management Programme | 342.94 | Public Works | M/o Water Resources, River Development and Ganga Rejuvenation |
| 4 | Right of Children to Free and Compulsory Education Act, 2009 | 178.35 | School Education | M/o Human Resource Development |
| 5 | Family Welfare Programme (liquidation of arrears) | 107.16 | H&FW | M/o Health and Family Welfare |
| 6 | Construction of Fishing Harbours | 1.85 | AHD&F | M/o Agriculture & Farmers Welfare |
| 7 | Command Area Development & Water Management Programme (CAD&WMP) | 81.13 | Agriculture | M/o Agriculture & Farmers Welfare |
| 8 | One time Additional Central Assistance for Annual Plan 2014-15 | 76.00 | PD&SI | M/o Finance |

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | Disaster Relief Assistance for flood in 2015 | 66.90 | Revenue | M/o Finance |
| 10 | National Savings-Cum-Relief Scheme For Fishermen | 186.23 | AHD&F | M/o Agriculture & Farmers Welfare |
| 11 | Repair, Renovation And Restoration Of Water Bodies | 30.58 | Public Works | M/o Water Resources, River Development and Ganga Rejuvenation |
| 12 | Central Assistance under National Food Security Act (NFSA) | 272.91 | CF&CP | M/o Consumer Affairs, Food and Public Distribution |
| **TOTAL** | | **4545.35** | | |
| **Finance Commission Grant** | | | | |
| 13 | 13th Finance Commission grants pending (Others) | 522.91 | Finance | M/o Finance |
| 14 | 14th Finance Commission – SDRF | 84.15 | Revenue | M/o Finance |
| **Civil Supplies Corporation** | | | | |
| 15 | Custom Milled Rice Subsidy | 2203.25 | CF&CP | M/o Consumer Affairs, Food and Public Distribution |
| **GST Compensation** | | | | |
| 16 | GST Compensation Arrears | 13504.74 | Commercial Taxes | M/o Finance |
| **GRAND TOTAL** | | **20860.40** | | |

**We request that the pending dues of Rs.20860.40 crore be released to Tamil Nadu at the earliest, so that the State could effectively overcome from the fiscal crisis.**

**III. Request for Extending the period of GST Compensation:**

During the introduction of GST, the State accepted to forego its fiscal autonomy with an assurance from the Union Government that our revenues will be protected. In the last five years, there has been a wide gap between the actual revenues realized and the protected revenues guaranteed. This trend was visible even before the pandemic and the gap has been increasingly wide ever since. The States' revenues are yet to recover despite easing out of Covid pandemic. At this juncture, the GST Compensation period is coming to an end on 30.06.2022. Consequently, in the coming financial year, Tamil Nadu will face a revenue loss of approximately Rs.20,000 crore.

**We urge the Union Government to extend the period of compensation by atleast two years beyond June 2022.**

●●●●●●●

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in